**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**OS – 476/2016**

நாள் 03.06.2025

DW1 – வெங்கடாசலம்

த/பெ – லேட்.பெரியமுருகப்ப கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of June 2025.)**

**குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கு பற்றிய விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். எனது சொந்த ஊர் தெக்கலூர் அருகில் உள்ள ஆலம்பாளையம் என்றால் சரிதான். எனது அப்பா பெரிய முருகப்ப கவுண்டர் ஆலம்பாளையத்திலிருந்து திருப்பூருக்கு 60 வருடத்திற்கு முன்பு சென்று விட்டார். எனது அப்பா திராவிட கழக கட்சியில் ஒன்றிய செயலாளராக இருந்தார் என்றால் இல்லை. எனது அம்மா அ.வ.எண்.264/1962 என்ற பாக வழக்கை திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பாகவே கடன் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான வழக்கை எனது அம்மா தாக்கல் செய்திருந்தார் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது அம்மா தாக்கல் செய்திருந்த கடன் சம்பந்தமான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் எனது அம்மாவிற்கு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து வழக்காடி வந்ததால் நீதிமன்ற நடவடிக்கைகள் அவருக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். 1-ம் வாதி மயங்கம்மாள் புதுப்பாளையத்தில் நிலத்தில் விவசாயம் செய்து வந்தார் என்றால் அது எனக்குத் தெரியாது. அதேபோல் 1-ம் வாதிக்கு படிப்பறிவு கிடையாது என்றால் அது எனக்குத் தெரியாது. கந்தப்ப கவுண்டர் மகன் நஞ்சப்ப

கவுண்டர் என்பவர் எனது தாத்தா என்றால் சரிதான். அந்த நஞ்சப்ப கவுண்டருக்கு கந்தசாமி கவுண்டர், பெரிய முருகப்ப கவுண்டர் மற்றும் சிறிய முருகப்ப கவுண்டர் என்ற 3 ஆண்மக்கள் என்றால் சரிதான்.

2. எனது அப்பா பெரிய முருகப்ப கவுண்டர் பி.வா.சா.ஆ.1–ல் கண்ட 7 காலைகளில் உள்ள சொத்துக்களை அவரது சகோதரர் கந்தசாமி கவுண்டரிடமிருந்து 30.03.1960–ம் தேதியில் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அவ்வாறு கிரையம் பெற்ற 7 காலைகளில் உள்ள 4 காலை சொத்துக்கள் தான் இந்த வழக்கு சொத்துக்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் மூல ஆவணம் 30.05.1930–ம் தேதியிட்ட கிரைய ஆவணம் என்றால் சரிதான். அதனால், அந்த ஆவணங்கள் பற்றிய விபரம் எனக்குத் தெரியும். பி.வா.சா.ஆ.1–ன் அசல் கிரைய ஆவணம் என் கை வசம் உள்ளது. 30.05.1930–ம் தேதியிட்ட கிரைய ஆவணம் அசல் என் கைவசம் உள்ளது. அந்த ஆவணங்களை தேவைப்பட்டால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். அந்த 30.05.1930–ம் தேதியிட்ட பதிவு கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் அது வா.சா.ஆ.12 குறியீடு செய்யப்பட்டது.

3. வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் மூலம் 1–ம் வாதி மயங்கம்மாள் நஞ்சுக்குட்டி கவுண்டர் மகன் கந்தசாமி கவுண்டர் என்பவரிடமிருந்து தாவா சொத்துக்களை 22.04.1964–ம் தேதியில் பதிவு கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பொய் பத்திரம். அந்த கிரைய பத்திரம் பொய் பத்திரம் என்று சொல்லி எதிர் வழக்குரையிலும், எனது முதல் விசாரணை வாக்குமூலத்திலும் மறுத்து சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் அந்த கிரைய ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றும்

எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.18–ல் கண்ட சொத்துக்களை மட்டுமே நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். அ.வ.எண்.264/1962 என்ற வழக்கில் ஏற்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணையின் பேரில் தான் பி.வா.சா.ஆ.18–ல் கண்ட சொத்துக்களுக்கு பட்டா பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.7 புல வரைபடத்தின் படி சர்வே எண்.49/3 ஆனது 49/3A, 49/3B என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் சர்வே எண்.49/3A ஆனது 3A1 முதல் 3A7 வரையிலும் சர்வே எண்.49/3B ஆனது 3B 1 முதல் 3B7 வரையிலும் உட்பிரிவுகள் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 49/3A1 மற்றும் 49/3B1 ஆகிய இரண்டு காலைகளுக்கு மட்டும் பி.வா.சா.ஆ.18 பட்டா பெற்றுள்ளோம் என்றால் சரிதான்.

4. மேற்படி 49/3A1 மற்றும் 49/3B1 ஆகிய இரண்டு காலைகளும் ஒரே இனமாகவும், கிழமேல் நீளமாகவும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கு தென்புறத்தில் 49/3A1 மற்றும் 49/3B1 ஆகிய சொத்துக்களை தவிர்த்து மற்ற உட்பிரிவு கொண்ட சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண். 49/3A1 மற்றும் 49/3B1 சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் 1.02 ஏக்கர் பரப்பு கொண்டது என்றால் சரிதான். அதேபோல் 49/3A1 மற்றும் 49/3B1 காலைகளுக்கு கிழபுறத்தில் சர்வே எண்.49/4 காலை சொத்து உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.9–ன் படி சர்வே எண்.56/2 ஆனது 56/2A, 56/2B என்றும் 56/2A ஆனது 56/2A1, 56/2A2 என்றும், 56/2B ஆனது 56/2B1 முதல் 56/2B10 வரையிலும் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால், சர்வே எண்.56/2A1 மற்றும் 56/2B1 ஆகிய காலைகளில் மொத்தம் 66–3/4 சென்ட் எங்களுக்கு பாத்தியம் என்றால் சரிதான். அந்த

2 காலைகளுக்கு கிழபுறத்தில் 56/2A2 உள்ளிட்ட மற்ற உட்பிரிவு சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். அதேபோல் பி.வா.சா.ஆ.11–ல் கண்ட சர்வே எண்.54/2 ஆனது 54/2A1 முதல் 54/2A4 வரையில் உட்பிரிவு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் சர்வே எண்.54/2A3–ல் 38 சென்ட் பரப்பு கொண்ட நடுபாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால், அந்த 38 சென்டிற்கு வடபுறம் உள்ள சர்வே எண்.54/2A2 முதல் தென்புறம் உள்ள 54/2A4 காலைகள் வேறு நபர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.54/2A3 க்கு கிழபுறமாக சர்வே எண்.54/3B உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.54/2A3 ஆனது கிழமேல் நீளமாக உள்ளது.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.06.03 16:01:00 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**